053

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNU5540/ESU3240– ஒப்பீட்டுக் கல்வியும் கல்வியியல் பிரச்சினைகளும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.01.2025 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** விசேட தேவைகள் சார் கல்வியில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களுக்கான ஒப்பீட்டுக் கல்வியைப் படிப்பதன் நான்கு (04) நன்மைகளைக் குறிப்பிடுக.

**2.** பிராந்தியமயமாக்கலில் இருந்து உலகமயமாக்கலுக்கு (Regionalization to Globalization) மாறுவதையும் அதன் தாக்கங்களையும் சுருக்கமாக விவரிக்குக.

**3.** 1972இன் கலைத்திட்ட சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை இரண்டு (02) பொருத்தமான உதாரணங்களை வழங்கி, ஆராய்க.

**4.** இலங்கையில் விசேட தேவைகள் சார் கல்வி தொடர்பான நான்கு (04) முக்கிய கல்விச் சவால்களை அடையாளம் காண்க.

**5.** 1867இல் மோர்கன் குழுவால் முன்மொழியப்பட்ட ஐந்து (05) பரிந்துரைகளை பட்டியலிடுக.

**6.** ஐக்கிய இராச்சியத்தின் கல்வி முறை இலங்கையின் நவீன கல்வியின் வளர்ச்சியில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை விளக்குக.

**7.** விசேட தேவைகள் சார் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு (02) முயற்சிகளை விவரிக்குக.

**8.** டச்சுக் கல்வி முறையின் நான்கு (04) தனித்துவமான அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

**9. i.** 1943இல் கல்விக்கான சிறப்புக் குழுவை நியமிக்க வழிவகுத்த வரலாற்று மற்றும் சமூக – அரசியல் சூழ்நிலைகளை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** 1943இல் கல்விக்கான சிறப்புக் குழு வழங்கிய ஐந்து (05) முக்கிய பரிந்துரைகளைக் கண்டறிந்து அவற்றில் ஒன்றிற்கான (01) விரிவான விளக்கத்தை வழங்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் இலங்கைச் சமூகத்தின் வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பொருத்தமான உதாரணங்களுடன் பகுப்பாய்வு செய்க.

**(08 புள்ளிகள்)**

**10. i.** இலங்கையின் புராதன கல்வி முறையின் நான்கு (04) பண்புகளை அடையாளம் கண்டு சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**



57

**ii.** பண்டைய இலங்கைக் கல்வியில் பயன்படுத்தப்பட்ட கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள் மற்றும் கற்றல் வளங்களைப் பற்றி ஆராய்ந்து, அவற்றின் தனித்துவமான அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

**(09 புள்ளிகள்)**

**iii.** விசேட தேவைகள் சார் கல்வியில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியராக உங்கள் பார்வையில், இலங்கையின் பண்டைய கல்வி முறையின் பலம் மற்றும் வரையறைகளை மதிப்பிட்டு. உங்கள் பகுப்பாய்வுக்கு உதவ எடுத்துக்காட்டுக்களை வழங்குக.

**(07 புள்ளிகள்)**

**11.** “விசேட தேவைகள் சார் கல்வியில் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஒரு புதிய போக்கு.”

**i.** இலங்கைச் சூழலில் விசேட தேவைகள் சார் கல்வியில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** உண்மையான வகுப்பறை அமைப்பில் விசேட தேவைகள் சார் கல்வியில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் போது கல்வியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேலே (ii) இல் குறிப்பிட்டுள்ள சவால்களை சமாளிக்க நீங்கள் பயன்படுத்தும் மூன்று (03) நடைமுறை உத்திகளை விளக்குக. குறிப்பிட்ட உதாரணங்களை வழங்குக.

**(10 புள்ளிகள்)**

**12. i.** பல்லினச் சமூகத்தை வரையறுக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** தென்னாபிரிக்காவில் அதன் அமுலாக்கத்தின் அடிப்படையில் நிறவெறிக் கொள்கையில் ஐந்து (05) முக்கிய பண்புகளை அடையாளம் காண்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** தென்னாபிரிக்காவின் கல்வியின் தரத்தை மேம்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் உட்பட கல்வி நடைமுறைகளில் நிறவெறிக் கொள்கையின் தாக்கம் பற்றி பகுப்பாய்வு செய்க

**(10 புள்ளிகள்)**

**13. i.** தேசிய மொழிக் கொள்கை என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** இரண்டு (02) பொருத்தமான உதாரணங்களை வழங்கி, ஒரு நாட்டிற்கான தேசிய மொழிக்கொள்கையை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றி ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** தனிப்பட்ட சிறுபான்மை குழுக்கள் மற்றும் ஒட்டுமொத்த தேசத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் இலங்கையின் தேசிய மொழிக் கொள்கையின் போதுமான தன்மையை விமர்சன ரீதியாக மதிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

**14. i.** மீஜி காலாத்தில் ஜப்பானில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு (02) கல்விச் சீர்திருத்தங்களைச் சுருக்கமாக விளக்குக

**(04 புள்ளிகள்)**

**ii.** ஜப்பானில் இடைநிலைக் கல்வி தொடர்பான இரண்டு (02) பிரச்சினைகளைக் கணடறிந்து விளக்குக, பொருத்தமான உதாரணங்களை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** பகுதி (ii) இல் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க ஜப்பானால் செயல்படுத்தப்பட்ட மூன்று (03) நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்க.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -